Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.315/2012 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 3 |
| Name | : | சேகர் |
| Father's/Husband's Name | .. | பழனிசாமி |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 58 |

Date: 27.12.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் திருவொற்றியூரில் உள்ள கல்யாண செட்டிநகரில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 24.04.2012, அன்று என் சகலை பாலகிருஷ்ணன் அவர்களின் மகன் முருகன் என்பவர் ஜோதி நகரில் உள்ள ஒரு உரிமையாளரிடம் வேலை பார்த்து வந்தார். லாரியின் மீது ஏறி கயிறு கட்டும் வேலை பார்த்து வந்தார். அந்த உரிமையாளர் அவருக்கு தலைக்கவசம் மற்றும் பெல்ட் ஆகியவை கொடுக்காததால் விபத்து ஏற்பட்டு முருகன் இறந்து விட்டதாக தகவல்

தெரிவித்தார்கள். காலை சுமார் 9 மணி அளவில், என்னுடைய சகலை என்னை அழைத்து விபத்து பற்றி கூறி உடன் வருமாறு சொன்னார். சம்பவ இடத்திற்கு, நாங்கள் சென்றோம். ஆனால் அதற்குள், உடலை சுகம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விட்டார்கள்.

2. சுகம் மருத்துவமனை சென்று நான் பார்த்த பொழுது, என் சகலை மகனுக்கு இடது பக்க காதில் அடிபட்டிருந்தது. மருத்துவர்கள், தொடர் சிகிச்சைக்காக, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள். ஆம்புலன்ஸ் வாகனம் உதவியுடன் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பரிசோதனை செய்துவிட்டு, சுமார் 4 மணி அளவில், அவர் இறந்து விட்டதாக மருத்துவர் தெரிவித்தார். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

3. என்னுடைய அண்ணன் மற்றும் நான் இருவரும் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். முருகன் என்பவருக்கு அடிபட்டது சம்பந்தமாக அவர் வேலை பார்த்து வந்த நிறுவனத்தில் இருந்து யாரும் எனக்கு தகவல் கொடுக்கவில்லை என்றும் என் அண்ணன் இதைப் பற்றி கூறித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முருகன் என்பவருக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்கவில்லை என்பது என் அண்ணன் கூறித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய சகலை பாலகிருஷ்ணன் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய சகலையின் மகன் முருகன் என்பவர் கிளீனர் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. கண்டைனரில் கொக்கி மட்டும் வேலை செய்து வருகிறார். சம்பவம் தொடர்பாக, புகார் கொடுப்பதற்கு நானும் என்னுடைய அண்ணனும் சம்பவம் நடந்து எத்தனை நாட்களுக்கு

பிறகு காவல் நிலையம் சென்றோம் என்றால் அன்றைய தினம் மாலை வேலையில் சென்று வந்தோம். யார் புகாரை எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் இருந்தவர்கள் புகாரை எழுதினார்கள். என்னுடைய சகலையின் மகன் கிளீனர் வேலை தான் பார்த்து வருகிறார் என்றும், கண்டெய்னரில் கொக்கி மட்டும் வேலை பார்க்கவில்லை என்றும் அவர் தானாக கண்டைனர் மீது ஏறி அவருடைய கவனக்குறைவால் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார் என்றும் எதிரிகளின் கவன குறைவாளோ அல்லது அவர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்காத காரணத்தினாலோ அவர் கீழே விழுந்து விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

5. நான் சாட்சியம் அளித்தது போல், என்னுடைய அண்ணனுடன் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றும் ஒரு வாரம் கழித்து காவல் நிலையம் சென்று வந்தேன் என்றால் சரியல்ல.